**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.103/2023**
Prosecution: **PW4**

Deposition of the witness of **LW4**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.புவனேஸ்வரி | District | இராணிப்பேட்டை |
| Husband Name | திரு.கதிர்வேலன் | Occupation | கூலி வேலை |
| Village /Area | திமிரி | Age | 45 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 6967 6984 3239 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.03.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள திமிரி கிராமத்தில் வேலாயுதபாணி தெருவில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் என் ஊரை சேர்ந்தவர்கள். இந்த வழக்கில் இறந்து போன கலையரசன் என் 2-வது மகன் ஆவார். இந்த வழக்கில் காயம்பட்ட கார்த்தி, கோபி ஆகிய இருவரும் என் மகன் கலையரசனின் நண்பர்கள். இந்த வழக்கு சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு என் மகனும், அவரது நண்பர்களும் விளாரி ஏரியில் மீன் பிடித்தது சம்மந்தமாக சுப்பிரமணியன் என்பவருடன் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. அந்த பிரச்சனை காரணமாக என் மகனும், அவனது நண்பர்களும் சென்னைக்கு சென்று தங்கி வேலை செய்து வந்தனர். பின்னர் ஒரு மாதம் கழித்து ஊருக்கு வந்தார்கள். 02.08.2022-ம் தேதி காலை 11.15 மணிக்கு என் மகன் கலையரசன் மஞ்சள் நிற மோட்டார் சைக்கிளில் அவனது நண்பர்கள் கார்த்தி, கோபி ஆகியோருடன் திமிரி பஜாரில் முடி வெட்டுவதற்காக ராமபாளையம் வழியாக சென்ற போது என் மகனையும், அவனது நண்பர்களையும் எதிரிகள் 6 பேரும் அடித்துக் கொண்டிருப்பதாக சத்யா என்பவர் என்னிடம் வந்து சொன்னார். உடனே நானும், லலிதா, சத்யா, நளினி ஆகியோர் ராமபாளையம் சாலையில் உள்ள சர்ச் அருகே சென்றோம். நாங்கள் அங்கு சென்று பார்த்த போது எதிரி அசோகன் கத்தியால் என் மகன் கலையரசனை கழுத்தில் வெட்டினார். மற்ற எதிரிகள் கார்த்தி மற்றும் கோபி ஆகிய இருவரையும் வேலி கொம்பால் அடித்துக் கொண்டிருந்தார்கள். பின்னர் காயம்பட்ட கலையரசனை திமிரி அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் ஏற்றி சென்றார்கள். பின்னர் திமிரி அரசு மருத்துவமனையிலிருந்து ஆற்காடு அரசு

மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு கலையரசனையும், கோபியையும் அனுப்பி வைத்துள்ளனர். ஆற்காடு அரசு மருத்துவமனையில் என் மகனை பரிசோதித்த மருத்துவர் வரும் வழியிலேயே கலையரசன் இறந்துவிட்டதாக சொல்லியிருக்கிறார். காயம்பட்ட கார்த்தி என்பவரை வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். என் மகன் கலையரசனின் உடலை வேலூர் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் 03.08.2022–ம் தேதி காலை 9.15 மணிக்கு என் மகன் கலையரசனின் உடல் மீது காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்த போது நான் சாட்சியாக உடனிருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

சம்பவ இடத்திலிருந்து காயம்பட்ட 3 பேரையும் எந்த மருத்துவமனைக்கு யார் எப்படி அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த விவரம் சத்யா என்பவர் எனக்கு சொல்லி தான் தெரியும். எதிரிகள் யாரும் கத்தியாலோ, கட்டையாலோ யாரையும் நான் சொல்வது போல் தாக்கி காயப்படுத்தவில்லை என்றாலும், நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் போலிசார் சொல்லிக் கொடுத்தபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலிசார் என்னை சம்பவத்திற்கு மறுநாள் வேலூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். போலிசார் என்னை விசாரித்த போது எந்த எதிரி எந்த ஆயுதத்தை வைத்திருந்தார் என்றும், யார் யாரை அடித்தார்கள் என்றும் என்ன காயம் யாருக்கு ஏற்பட்டது என்பதையும் சொன்னேன். நான் எந்த விவரமும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் அன்று நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை.

<u>மறுவிசாரணை:–</u> இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.